ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2397/11 - 2024 අගෝස්තු මස 12 වැනි සඳුදා - 2024.08.12

2397/11 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 12 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: BD/HD/LND/3/1/ ஏ.எம். ஜயதிஸ்ஸ.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின்
இல.: 4-3/7/2017/HW/198.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**நோக்கம் :** கொழும்பிலிருந்து மட்டக்களப்பு வீதியில் 168/10 - 168/11 கால்வாய்க்கு இடையில் நிலச்சரிவு ஏற்படும் இடத்தில் நிலச் சரிவு கட்டுப்பாடு தொடர்பான கட்டமைப்புகள் அமைப்பதற்காக எடுக்கப்படுகின்றது.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் ஹல்தும்முல்ல பிரதேச செயலாளர் பிரிவில் கந்தபல்ல கோரளை எனும் சிறு பிரிவில் மரங்கஹவெல (157 F) கிராம அலுவலர் பிரிவில் மரங்கஹவெல எனும் கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இல. க.தி. 710574 இல் தொகுதி இல. 02, பத்திர இல. 1 மற்றும் 2024.04.08 ஆந் திகதியுடைய கடத்திரல் வரைபடத்தில் துண்டு இல. 01 எனக் குறிப்பிடப் பட்டுள்ள 0.0996 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணியின் விபரங்கள் பின்வருமாறு :

**01. துண்டு இல. 01 - காணியின் பெயர் : கடோல்வலஹேன; விபரம் : தோட்டம், சுமார் 25 - 30 வருட வயதுடைய கலப்புப் பயிர்ச்செய்கையொன்றும் கிணறும் உள்ளன; உரிமை கோருவோர் : மரங்கஹவெல ஊவதென்னயில் வசித்தவரும் காலஞ் சென்ற அத்தனாயக்க மொஹொட்டால்லாகே ஜயதிஸ்ஸ அவர்கள் தற்போது அவரது மனைவியான மரங்கஹவெல ஊவதென்ன எனும் முகவரியில் வசிக்கும் திருமதி கொடிதுவக்கு ஆரச்சிலாகே மேபல்; விஸ்தீரணம் : 0.0996 ஹெக்டயார் (39.4 பேர்ச்)**

வடக்கு : இ.கி.த. 286 இல் துண்டு இல. 37; கிழக்கு : இ.கி.த. 286 இல் துண்டு இல. 37 மற்றும் 289; தெற்கு : இ.கி.த. 286 இல் துண்டு இல. 289 மற்றும் 37; மேற்கு : இ.கி.த. 286 இல் துண்டு இல. 37.



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு ஹல்தும்முல்ல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கே.ஏ.ஜே. பிரியங்கிகா,
பிரதேச செயலாளர்,
ஹல்தும்முல்ல.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
ஹல்தும்முல்ல,
2024, ஓகத்து 05.

EOG 08 - 0150